

கோவை வடக்கு மாவட்ட திமுக சார்பில் தொண்டாமுத்தூர் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கலைஞர் இலவச அவசர ஊர்தியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியம் கொடியசைத்து துவக்கி வைத்தார். வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் ஈஸ்வரசாமி எம்.பி.,தொகுதி பொறுப்பாளர் சிந்து ரவிச்சந்திரன், தொண்டாமுத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் கமலம் ரவி, வடக்கு மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.என்.செந்தில் ஜெயந்தி, பொருளாளர் ரஹ்மான் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சோமு என்கிற சந்தோஷ் சுப்பிரமணி,அஸ்ரப் அலி, மேயர் ரங்கநாயகி துணை மேயர் வெற்றிச்செல்வன் கல்விக்குழு தலைவர் மாலதி, தொண்டாமுத்தூர் பேரூர் கழக செயலாளர் டி.வி.குமார் அணிகளின் அமைப்பாளர்கள் ஹுசேன்,வேலுச்சாமி,தென்னைசிவா, தளபதி தியாகு கோவை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# செங்கம் தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## மு.பெ.கிரி எம்.எல்.ஏ. முன்னிலையில் - பெ.சு.தி.சரவணன் சிறப்புரை!

திருவண்ணாமலை, செப். 2 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் செங்கம் கிழக்கு மத்திய மேற்கு ஒன்றியம் பேரூர் கழக திமுக சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் செங்கம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது கூட்டத்திற்கு அவைதலைவர்கள் வீரபத்திரன், சேட்டு, குப்புசாமி, முத்துகிருஷ்ணன் ஆகியோர் தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளரும் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

செயல்வீரர்கள் கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைதலைவர் கோ.கண்ணன்,கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

அப்பொழுது செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி முன்னிலை வகித்தது பேசுகையில் இந்தியாவில் முதல் முதலில் ஒரு மாநில கட்சி ஆட்சிக்கு வந்தது தமிழ்நாட்டில் திமுக தான் எனவும் மலைவாழ் மக்களுக்கு தனி வாரியம் மற்றும் வீட்டு வசதி வாரியம் போன்ற வாரியங்கள் அமைத்து திட்டங்கள் மக்களுக்கு கொண்டு சேர்க்கப்பட்டது.மேலும் கான்கிரீட் வீடுகள் அமைக்கப்பட்டது திமுக ஆட்சியில் முத்தமிழர் கலைஞர் தான் அப்பொழுது முதலமைச்சர் ஆக இருந்த கலைஞர் அறிவித்த கான்கிரீட் வீடுகள் இந்தியா முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது தற்பொழுது தமிழ்நாட்டில் கலைஞர் கனவு இல்லம் என்ற திட்டம் தொடர்ந்து மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது திமுக மட்டும் தான் இந்தியாவில் இட ஒதுக்கீடு வழங்கி மாணவர்களுக்கு கல்வி கற்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளது.

சொந்த விருப்பு வெறுப்புகள் கலைந்து அனைவரும் கடமை உணர்வோடு பாடுபட்டால் மட்டும் தான் திமுக தொடர்ந்து வெற்றி பெறும். தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவுகளும் கொள்கைகளும் மனதில் உள்வாங்கி தற்பொழுது அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்தும் கிடைக்கக்கூடிய ஒரு சிறந்த ஆட்சி தமிழ்நாட்டில் தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் கொடுத்து வருவதாக பேசினார்.

நாட்டு மக்களுக்கு சட்டமும் திட்டமும் சரியாக சென்றடைய வேண்டும் என்றால் திமுக ஆட்சி தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆட்சி செய்ய வேண்டும் அனைத்தும் அனைத்து தரப்பு மக்களுக்கும் முழுமையாக கிடைக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு திமுக தொண்டனும் முழு ஈடுபாடு கட்சி உணர்வோட பணியாற்றிட வேண்டும் என பேசினார்.

இதனைத் தொடர்ந்து தலைமை செயற்குழு உறுப்பினரும் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் பேசுகையில் 10 ஆண்டு காலமாக அதிமுக ஆட்சி தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை அறிவிப்புகள் மட்டுமே அறிவித்துவிட்டு சென்றுவிட்டனர் திமுக ஆட்சி தமிழ்நாட்டில் ஆட்சியில் அமைந்த உடன் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறுகின்றனர் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவுகள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றால் தொடர்ந்து திமுக ஆட்சி தமிழ்நாட்டில் ஆட்சி செய்ய வேண்டும் தொடர்ந்து தமிழ்நாட்டில் திமுக ஆட்சி இருந்தால் மட்டுமே மக்களுக்கான சலுகையும் கட்சியும் பலமாக இருக்கும்

தலைமை அறிவிப்புக்கு ஏற்று முழுமையாக ஒவ்வொரு தொண்டனும் பாடுபட்டு திமுகவின் அலை தமிழ்நாட்டில் வீச வேண்டும் திமுக ஆட்சியில் திட்டங்களும் சலுகைகளும் வீடுகள்தோறும் திமுக நிர்வாகிகள் மக்கள் மனதில் பதியும் வகையில் பிரச்சாரம் செய்ய வேண்டும் திமுக அரசின் சாதனைகளும் மக்கள் மத்தியில் பேச வேண்டும் உள்ளூர் மக்களின் தேவைகள் அவர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் பிரச்சனைகளை திமுக நிர்வாகிகள் தீர்த்து வைக்க வேண்டும் ஒவ்வொரு கிளைக் கழகத்திலும் திமுக நிர்வாகிகள் முழு ஈடுபாடு பணியாற்றிட வேண்டும் திமுக தொண்டர்களின் அடையாளம் கருப்பு சிவப்பு மட்டுமே என பேசினார்.

நிகழ்ச்சியில் நகரக் கழக செயலாளர் அன்பழகன் ஒன்றிய செயலாளர்கள் மனோகரன் செந்தில்குமார் ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர் பிரபாகரன் பேரூராட்சி தலைவர் சாதிக்பாஷா மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் செங்கம் கிழக்கு மத்தியம் மேற்கு பேரூர் கழக நிர்வாகிகள் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## குடும்ப அட்டைதாரர்கள்

# துவரம் பருப்பு, பாமாயில் செப். 5 வரை பெற்றுக்கொள்ளலாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, செப். 2 -

பொது விநியோகத் திட்ட குடும்ப அட்டைதாரர்கள் ஆகஸ்ட் 2024 மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் செப்டம்பர் மாதம், 5-ஆம் தேதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

இது குறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் ஆகஸ்ட் - 2024 ஆம் மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஒதுக்கீட்டினை பெறாத குடும்ப அட்டைதாரர்கள் முழுமையாகப் பெற்றுப் பயன்பெறும் வகையில், பொதுமக்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டு துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக் கெட்டினை வரும் செப்டம்பர் 2024, மாதம் 5-ஆம் தேதி வரையில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப் பில் கூறப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கரம்பக்குடி தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் தவ.பாஞ்சாலன் வரவேற்பில், மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில், மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையில் புதுப்பட்டி எஸ்.எஸ் திருமண மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநில இலக்கிய அணி துணைத்தலைவர் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகர், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளரும் புதுக்கோட்டை துணை மேயருமான எம்.லியாகத் அலி, ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராஜேந்திரதுரை, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, என்.ஆர்.பரிமளம், சி.வெங்க டேசன், கோ.மதியழகன், ஆர்.ராஜாங்கம், எம்.தனவேந்தன், கோ.பன்னீர், தியாக. இளஞ்செழியன், ஆர்.சந்திரசேகர், சி.சந்திரசேகர், பி.கணேசன், ஆர்.முத்தன், ஜி.சத்யா, ஆர். சரவணன், ஆர்.சபாபதி, ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.நடராஜன், நித்யா முருகேசன், ஏ.ஆர். லட்சுமணன், ஆர்.ராமசாமி, பூ.முருகேசன், க.மணிகிளாஸ், எம்.மயில்வாகனன், என்.எம். அய்யப்பன், கோ.குபேந்திரன், என்.ராஜாராம், பி.பானுமதி உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

## கலைஞர் நகரில் வட்டக் கழகக் கூட்டம்!

சென்னை, செப். 2 –

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் வட்டக்கழக செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு என்.சக்கரவர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் குணசேகரன், ஏ.எம்.வி. பிரபாகராஜா எம்.எல்.ஏ., கணக்கு தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஸ்டாலின், பகுதி கழகச் செயலாளர் கே.கண்ணன், மு.ராசா, துரைராஜ், பி.எஸ். முருகேசன், மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், சசிகுமார்,எஸ் நிஷா சையத், கனிமொழி தனசேகரன், உமாபதி, அஜந்தா ரவி ,தியாகு, பாபு, ரவி ,பெரியசாமி, சீனிவாசன், தணிகாசலம், டி.செல்லா, ராஜேஸ்வரி, டைகர் பழனி, தனசேகரன், ஜெகதீசன், நா.பாலா, சதீஷ், எஸ்.புகழ் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி அனைத்து அணி நிர்வாகிகள் செயல்வீரர்கள் மற்றும் போக்குவரத்து கழக தொழிலாளர்கள் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றியம், ஆலம்பூண்டி ரங்க பூபதி கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து வேலை வாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவினை வழங்கினார். உடன் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் காஞ்சனா ,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், கல்லூரி நிறுவனர் ரங்க பூபதி, செயலாளர் ஸ்ரீபதி உள்ளனர்.

## அண்ணா சாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த

# காவல் துறை உதவி ஆணையரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.2 -

**சென்னை அண்ணாசாலை மன்றோ சிலை அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்து உயிரிழந்த காவல்துறை உதவி ஆணையரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

சென்னை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆணையராக பணியாற்றிவந்த திரு. சிவகுமார் (வயது 53) நேற்று முன்தினம் (31.8.2024) பகல் சுமார் 12.45 மணியளவில் சென்னை அண்ணா சாலை மன்றோ சிலை அருகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது மயங்கி விழுந்த நிலையில் சிகிச்சைக்காக இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன். காவல்துறை உதவி ஆணையர் சிவகுமார் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சிவகுமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட

# பல்வேறு கிராமங்களில் ரூ.2.09 கோடி மதிப்பில் புதிய திட்டங்கள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், செப். 2 -

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச் சாவ் தலைமையில் ரூ.2.09 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

பெரம்பலூர் மாவட்டத்தில், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேள்விமங்கலம் கிராமத்தில் முதலமைச்சர் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.94.66 லட்சம் மதிப்பீட்டில் வேள்விமங்கலம் அம்மாக்குளம் முதல் ஆற்றுப்பாதை வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், ஒகளூர் கிராமத்தில் ரூ.36.55 லட்சம் மதிப்பீட்டில் ஒகளூர் முதல் மோரன்குளம் வரை தார் சாலை அமைக்கும் பணியினையும்,

மாவட்ட ஊராட்சி குழு நிதியின் கீழ் அத்தியூர் கிராமத்தில் ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் அத்தியூர் கிழக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும், ரூ.8.33 லட்சம் மதிப்பீட்டில் அத்தியூர் மேற்கு பகுதியில் கழிவு நீர் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணியினையும், ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் அத்தியூர் மேற்கு பகுதியில் சிறு பாலம் மற்றும் கழிவு நீர் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணியினையும்,

நன்னை கிராமத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.29.97 லட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும், நன்னை ஊராட்சிக்குட்பட்ட கிளியூர் கிராமத்தில் ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும் என பல்வேறு பகுதிகளில் மொத்தம் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் 07 புதிய பணிகளுக்கு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்.

மேலும், இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அத்தியூர் ஊராட்சியில் மாவட்ட ஊராட்சி குழு நிதியின் கீழ் ரூ.7.10 லட்சம் மதிப்பீட்டில் அத்தியூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள பொதுமக்கள் காத்திருப்போர் கூடத்தினையும், ஒன்றிய பொது நிதியின் கீழ் ஒகளூர் ஊராட்சியில் ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒகளூர் நாடக அரங்க மேடையினையும், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் நன்னை ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் கட்டப்பட்ட மின் விசை பம்புடன் கூடிய குடிநீர் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

மேலும், ஒகளூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 48 மாணவர்களுக்கு ரூ.2,35,200 மதிப்பீட்டிலும் மற்றும் 23 மாணவிகளுக்கு ரூ.1,09,480 மதிப்பீட்டிலும், மற்றும் ஆடுதுறை அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 84 மாணவர்களுக்கு ரூ.4,11,600 மதிப்பீட்டிலும், 56 மாணவிகளுக்கு ரூ.2,66,560 மதிப்பீட்டிலும் என மொத்தம் 211 மாணவ,மாணவிகளுக்கு ரூ.10,22,840 மதிப்பீட்டிலான அரசின் இலவச மிதிவண்டிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்.

இதில் மாவட்ட ஊராட்சிக்குழுத் துணைத் தலைவர் முத்தமிழ்ச் செல்வி, வேப்பூர் ஒன்றியக் குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், மாவட்ட சுகாதார அலுவலர் பிரதாப் குமார், முதன்மைக் கல்வி அலுவலர் ம.சு. சுகானந்தம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வமணி, பூங்கொடி, குன்னம் வட்டாட்சியர் கோவிந்தம்மாள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவையொட்டி விழுப்புரம் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் இ.பாலாஜி ஏற்பாட்டில் டர்ப் "TURF கிரிக்கெட் போட்டியை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி துவக்கி வைத்தார். நகர விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர் பாலகுமாரன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.பி.பரத், ரா.சதீஷ், தேவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி, நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி , நிர்வாக பணியாளர் முன்னேற்றச் சங்கம் வாலிபால் மணி, வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை.சுரேஷ், தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட நகர நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அருகே உள்ள கச்சிராபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவையை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ,மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் துவக்கி வைத்தனர்,இதில் ஆலையின் செயலாட்சியர், ஆலையின் தொழிலாளர் நல அலுவலர்,கணக்கு அலுவலர், ஆலய அங்கத்தினர்,உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.